

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.8.2025) முகாம் அலுவலகத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தொல்.திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம் ஆகியோர் சந்தித்து உடல்நலம் குறித்து விசாரித்தனர். உடன் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் துணை பொதுச் செயலாளர் வன்னியரசு, தலைமை நிலையச் செயலாளர் பாலசிங்கம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் சாமுவேல்ராஜ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மநில செயற்குழு உறுப்பினர் சந்தானம் ஆகியோர் உள்ளனர்.




கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.8.2025)சென்னை அண்ணா அறிவாலயத்தில், “உடன்பிறப்பே வா” என்ற தலைப்பில் சட்டமன்றத் தொகுதி வாரியாக நிர்வாகிகளைச் சந்திக்கும் நிகழ்வில் மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகளை தனித்தனியாகச் சந்தித்து பேசினார். அப்போது கழக நிர்வாகிகளுக்கு புத்தகத்தையும் வழங்கினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (6.8.2025) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், Social Democratic Party of India (SDPI) கட்சியின் மாநிலத் தலைவர் நெல்லை முபாரக் சந்தித்து உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, மாநகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், SDPI கட்சியின் மாநில துணைத் தலைவர்கள் அப்துல் ஹமீத், அச உமர் பாரூக், மாநில பொதுச் செயலாளர்கள் நிஜாம் மொய்தீன், ஏ.கே. அப்துல் கரீம், தலைமை நிலைய செயலாளர் முஹம்மது ரஷீத், மத்திய சென்னை மாவட்ட தலைவர் முஹம்மது இஸ்மாயில் ஆகியோர் உடனிருந்தனர்.



பழம்பெரும் நடிகை திருமதி எம்.என். ராஜம் அவர்கள் தனது 90–வது பிறந்தநாளையொட்டி நாளிதழுக்கு அளித்த பேட்டி ஒன்றில், முதலமைச்சர் அவர்களை சந்திக்க விரும்புவதாக தெரிவித்திருந்தார். அவரது விருப்பத்தை நிறைவேற்றிடும் வகையில் முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.8.2025) சென்னை, அடையாறிலுள்ள பழம்பெரும் நடிகை திருமதி எம்.என். ராஜம் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, பிறந்தநாள் வாழ்த்து தெரிவித்து, பேசினார். இந்நிகழ்வின்போது, திருமதி துர்கா ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், திருமதி எம்.என். ராஜம் அவர்களின் மகன் பிரம்ம லஷ்மன் மற்றும் அவரது குடும்பத்தினர் உடனிருந்தனர்.

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

# ‘கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்’ - ‘கலைஞர் நிதிநல்கை’ திட்டம்!

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

**சென்னை,ஆக.7-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் `கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டம்’ மற்றும் `கலைஞர் நிதிநல்கை’ திட்டத்தைத் தொடங்கி வைத்து, முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 புதிய நூல்களை இன்று (7.8.2025) காலை 9.30 மணியளவில் அண்ணா அறிவாலயத்தில் வெளியிடுகிறார்.**

திராவிட இயக்கத்திற்கும் இதழியலுக்குமான உறவு, நூற்றாண்டைக் கடந்தது. நீதிக்கட்சியில் தொடங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் என திராவிட இயக்கத் தலைவர்கள் அனைவருமே பத்திரிகை நடத்தியவர்கள். தலைவர்கள் மட்டுமல்ல, தொண்டர்களும் இதழ்கள் நடத்திய வரலாறு கொண்டது, திராவிட இயக்கம். 250-க்கும் மேற்பட்ட இதழ்கள், திராவிட இயக்கத்தினர் சார்பில் வெளிவந்துள்ளன.



`மாணவ நேசன்’ என்ற கையெழுத்துப் பிரதி தொடங்கி, அச்சு இதழாக தனது மூத்த பிள்ளையாம் `முரசொலி’யை நடத்திய முத்தமிழறிஞர் கலைஞர், கால மாற்றத்துக்கேற்ப ஊடகங்களின் வடிவம் உருமாறியபோது, `கலைஞர் செய்திகள்’ தொலைக்காட்சியைத் தொடங்கினார். சமூக ஊடகங்கள் உருவான காலத்திலேயே, முதல் அரசியல் தலைவராக அதிலும் தன்னை முழுவீச்சில் ஈடுபடுத்திக் கொண்டார் கலைஞர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் முதலமைச்சரு மான மு.க.ஸ்டாலின் அவர்களும் `இளைய சூரியன்’ என்ற இதழை நடத்தியுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலி நாளிதழின் நிர்வாக இயக்குநராக இருந்துள்ளார். முத்தமிழறிஞர் பதிப்பகத்தையும் நடத்தி வருகிறார்.

இதழியல் துறைக்கும் திராவிட இயக்கத்துக்குமான இத்தகைய பிணைப்பின் அடிப்படையில், பத்திரிகை மீது ஆர்வம் கொண்டு வரும் இளைஞர்களுக்கு, பயிற்சி அளித்து அவர்களை மெருகேற்றும் விதமாக, உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னெடுப்பில், முரசொலி நாளிதழும் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சியும் இணைந்து `கலைஞர் மாணவப் பத்திரிகையாளர்’ திட்டத்தை தொடங்கவுள்ளது.



முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் 8 நூல்கள்

கலைஞரின் நினைவு நாளான இன்று (07.08.2025), காலை 9.30 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில், பேரறிஞர் அண்ணா – முத்தமிழறிஞர் கலைஞர் சிலைகளுக்கு அருகில் நடைபெறும் நிகழ்ச்சியில், இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

### முத்தமிழறிஞர் பதிப்பக நூல்களை முதல்வர் வெளியிடுகிறார்!

அதேபோல, திராவிட இயக்க இளம் ஆய்வாளர்களைக் கண்டறிந்து, அவர்களை வளர்த்தெடுத்து ஊக்குவிக்கும் விதமாக, `கலைஞர் நிதிநல்கை’ திட்டத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். மேலும், முத்தமிழறிஞர் பதிப்பகத்தின் சார்பில், உருவாகியுள்ள 8 புதிய நூல்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட, திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான துரைமுருகன் அவர்கள் பெற்றுக்கொள்கிறார்.

இந்நிகழ்ச்சியில் கலைஞர் செய்திகள் தொலைக்காட்சி செய்திப் பிரிவு தலைவர் ப.திருமாவேலன் வரவேற்புரையாற்றுகிறார்.

கலைஞர் மாணவப் பத்திரிகையாளர் திட்ட இலச்சினையை ‘நக்கீரன்’ ஆசிரியர் நக்கீரன் கோபால் அவர்களும், கலைஞர் நிதிநல்கை திட்ட இலச்சினையை திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்களும் பெற்றுக் கொள்கின்றனர்.

நிகழ்ச்சியின் நிறைவாக ‘முரசொலி’ செய்தி ஆசிரியர் கு.சேது, முத்தமிழறிஞர் பதிப்பகம் நீரை மகேந்திரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.